முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

யாழ் Win வெளியீடு 5


மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப்பரீட்சை, *2019* ஓகஸ்ட்

1 வினாத்தாள் I


சுட்டெண்:- .....

45 நிமிடம்

- **1ம், 2ம் வினாக்களில் தரப்பட்ட உருக்களுக்கு பொருத்தமான சொற்தொடரைத் தெரிவு செய்க.**



(1) 




1) வேகத்தின் வரையறை
2) வேகமாக செல்லவும்
3) நிறுத்துங்கள்


(2) 




1) முன்னால் நிறுத்தவும்
2) முன்னால் இரட்டை வளைவு
3) முன்னால் வழிவிடவும்

- **3ம், 4ம் வினாக்களில் தரப்பட்ட உருக்கோலத்தொகுதியில் அடுத்து வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.**

(3)  எனின்  .....

1) 
2) 
3) 


(4) 

1) 
2) 
3) 


www.ikedu.lk


LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk
மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்
zoom
ICT
Maths
English
Commerce
Tamil
History
Science
Sinhala
இன்னும் பல
தரம்
01-A/L
Medium
தமிழ்/ English
76667-4945
தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன
www.learneasy.lk || www.lkedu.lk


(5) வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



1) 3




2) 4



3) 5

(6) உருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?





1) 14

2) 11


3) 10

(7) முதலில் தரப்பட்ட உருவிற்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய உருவைத் தெரிவு செய்க.





1)



2)



3)

(8) ஒரு உதைபந்தாட்டம் 105 நிமிடம் வரை நீடித்தது. விளையாட்டு பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமானதாயின் எத்தனை மணிக்கு முடிந்திருக்கும்?

1) பி.ப 4.45 2) பி.ப 4.30 3) பி.ப 5.15


(9) 2016ம் ஆண்டு மே மாதம் 4ம் திகதி புதன்கிழமை எனின், யூன் மாதம் 20ம் திகதி என்ன கிழமை.


1) செவ்வாய் 2) புதன் 3) திங்கள்

(10) சமதூர இடைவெளியில் நடப்பட்ட மூன்று கம்பங்களுக்கு இடையிலான தூரம் 24உஅ எனின் ஆறு கம்பங்களுக்கு இடையிலான தூரம் யாது?


1) 48cm 2) 60cm 3) 56cm

(11) முதலில் தரப்பட்ட உருவுடன் ஒத்த உருவைத் தெரிவு செய்க.





1)




2)



3)

(12)



இவ்வுருவில் உள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?

1) 14 2) 9 3) 13

www.ikeu.lk

(13) பின்வரும் வாக்கியம் மிகக் கருத்துள்ளதாக அமையச் செய்ய வேண்டிய மாற்றத்தைத் தெரிவு செய்க.


"நான் நாளை நண்பனைப் பார்க்கச் சென்றேன்.


1) "நண்பன் என்பதற்குப் பதிலாக "சகோதரன்" என்பதைச் சேர்த்தல்.


2) "நாளை" என்பதற்கு பதிலாக "நேற்று" என்பதைச் சேர்த்தல்.


3) "நான்" என்பதற்கு பதிலாக "நாங்கள்" என்பதைச் சேர்த்தல்.

(14) வெற்றிடத்திற்கு பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.



1) 

2) 

3) 

(15) வீடு, கூடு, புற்று, குகை, குடை என்பவற்றில் பொருத்தமற்ற சொல்லைத் தெரிவு செய்க.

1) வீடு 2) குடை 3) குகை

(16) A என்பவர் B யின் தாய் ஆவார். ஆனால் B என்பவர் A இன் மகள் அல்லர் எனின், B என்பவர் யார்?

1) மருமகள் 2) மாமா 3) மகன்

- 1, 2, 3, 4 ஆகியவற்றிக்குப் பதிலாக A, B, C, D என்னும் எழுத்துக்களைப் பயன்படுத்தி பின்வரும் கணிதச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கேற்ப 17ம், 18ம் வினாக்களில் வரும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

(17) ..... + ... = D

1) A, C 2) A, D 3) B, C

(18) ..... x ..... = C


1) A, B 2) B, C 3) A, C

(19) ஆனந்தி ஜானகியை விட உயரமானவள். குமாரி ஆனந்தியை விடக்கட்டையானவள். இதன் படி பின்வருவனவற்றுள் எது மிகச் சரியான வாக்கியம்.

1) குமாரி ஜானகியை விட உயரமானவள்

2) குமாரியும் ஜானகியும் ஒரேயளவு உயரமானவர்கள்

3) மூவரிலும் ஆனந்தி மிக உயரமானவர்.

(20) 

? இடப்பட்ட இடத்தில் குறிப்பிடக்கூடிய சொல்.

1) KATE 2) TAKE

3) EYAK

(21) 11, 202, 3003, ----------, 500005 கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண் யாது?

1) 4004 2) 40004 3) 4000004

www.ikeduk.lk

(22) வரிசையின் முன்னாலிருந்து 17வது பிள்ளையாகவும் பின்னாலிருந்து 13வது பிள்ளையாகவும் மாதவன் நின்றான். எனின், வரிசையில் நின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை யாது?

1) 28 2) 29 3) 30


(23) பக்கம் ஒன்று 10m அளவுடைய சதுர வடிவமான பூம்பாத்தி ஒன்றைச் சுற்றிவர 2 மீற்றருக்கு ஒரு தூண் வீதம் நடப்பட்டு வேலி அமைந்துள்ளது. பூம்பாத்தியைச் சுற்றி வர நடப்பட்ட தூண்களின் எண்ணிக்கை யாது?

1) 16 2) 24 3) 20


(24) ரவி, ரதி, மதி ஆகிய மூன்று பிள்ளைகள் ரூபா. 1600.00 ஐத் தமக்கிடையே பங்கிட்டுக் கொண்டனர். ரவி பெற்ற பணம் ரதி பெற்றதை விட ரூபா. 200.00 அதிகமாகும். ரதி பெற்ற பணம் மதி பெற்றதை விட ரூபா. 100.00 அதிகமாகும். எனின் ரதி பெற்ற பணம் எவ்வளவு?

1) ரூபா. 700.00 2) ரூபா. 500.00 3) ரூபா. 400.00


(25) முதலில் தரப்பட்ட இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.



உரு - 1 உரு - 2

1) 

2) 

3) 

(26) மாணவர்கள் **இரகசியம்** கதைத்தனர். இவ்வாக்கியத்தில் தடித்த எழுத்திலுள்ள சொல்லுக்குரிய எதிர்ச்சொல்.

1) அமைதி 2) மெதுவாக கதைத்தல் 3) பரகசியம்

(27) சிங்கத்திற்கு- குருளை போல, தவளைக்கு .....

1) போதகம் 2) பேத்தை 3) குட்டி

(28) திறமையில் நம்பிக்கை என்பதை வலியுறுத்தும் பழமொழி

1) முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்

2) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்

3) சிறு துரும்பும் பல் குத்த உதவும்.

(29) தை மாதம் 1ம் திகதி திங்கட்கிழமை எனின், இம்மாதம் எத்தனை செவ்வாய்க் கிழமை வரும்?

1) 5 2) 4 3) 3

(30) 9 தரம் 8 எத்தனை

1) 48 2) 62 3) 72

• குகன், குணம் ஆகியோரின் வயதுகளின் கூட்டுத்தொகை 57 ஆகும். குணம் குகனை விடவும் 5 வயது கூடியவன். இத்தரவுகளைக் கொண்டு 31, 32, 33ம் வினாக்களுக்கு விடை தருக.

(31) குகனின் வயது யாது?

1) 25 வயது 2) 26 வயது 3) 31 வயது

www.lkedu.lk

(32) குணத்தின் வயது யாது?

1) 31 வயது 2) 26 வயது 3) 25 வயது

(33) இன்னும் இரண்டு வருடங்களின் பின்பு இருவரினது வயதுகளினதும் கூட்டுத் தொகை யாது?

1) 59 வருடங்கள் 2) 61 வருடங்கள் 3) 62 வருடங்கள்

(34) கவிதை ஒன்றின் நான்கு வரிகள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அதனை ஒழுங்கு படுத்தும் போது அமையும் சரியான விடையை தெரிவு செய்க.

A - வானும் கடலாக மாறுதம்மா - இந்த

B - மீனினம் ஓடிப் பறக்குதம்மா - ஊடே

C - மாட்சியிலுள்ளம் மூழ்குதம்மா

D - வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா

1) ABCD 2) BCDA 3) BDAC

(35) பின்வரும் சொல் வரிசையில் சரியான அகர வரிசை ஒழுங்கில் உள்ள சொற் தொகுதி எது?

1) காடு, கிளிஞ்சல், கரும்பு, கீரை

2) இசை, ஊஞ்சல், ஏணி, ஓடம், ஔவை

3) சாதனை, கைதி, சீப்பு, சூரியன்.


(36) 4 மனிதர்கள் 6 நாட்களில் செய்யும் வேலையை 4 நாட்களில் செய்து முடிக்க எத்தனை மனிதர்கள் தேவை?

1) 6 மனிதர்கள் 2) 8 மனிதர்கள் 3) 4 மனிதர்கள்


(37) கீழ்வரும் அடங்கல் முறையை சரியாக காட்டும் படம்

A- தாவரம் B - மரம் C - செடி D - வாழை


1)



2)



3)



(38) வெற்றுக் கூட்டுக்குப் பொருத்தமான விடையைத் தரும் அடைப்பைத் தெரிக.

61 - 21 = ☐

1) [8 X 6] 2) [5 X 8] 3) [7 X 8]

(39) சுமன் 100m ஓடும்போது கமல் 90m ஓடுவான், கமல் 100m ஓடும்போது குமார் 90m ஓடுவான் மூவரிலும் மிகவும் வேகமாக ஓடக்கூடியவர் யார்?


1) சுமன் 2) கமல் 3) குமார்

(40) அறிஞர்கள் பலர் கூடி வாதிடும் களம்

1) நீதிமன்றம் 2) பட்டிமன்றம் 3) பாராளுமன்றம்

www.lkedu.lk

முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved



மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப்பரீட்சை, 2019 ஓகஸ்ட்

1 **வினாத்தாள் II**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்:- .....

(01) பின்வரும் பாடலை நன்றாக வாசிக்க.

"கண்ணிற் சிறந்த விடுதலையைக்
கருதி வாழ்ந்தார் நம் தாத்தா
மண்ணில் யாவர் வாழ்விற்கும்
வழிகாட்டிடுவார் நம் தாத்தா

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடையினை பாடலில் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

i) இப்பாடலில் தாத்தா என விழிக்கப்படுபவர் யார்?

.....

ii) விடுதலை எதை விட உயர்வாகக் கருதப்படுகிறது.

.....

iii) தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்றைத் தெரிந்து எழுதுக?

.....

iv) அம்மாவின் அப்பாவை அழைக்கும் உறவு முறை எது?

.....

v) பெயர் அடைமொழி ஒன்றைக் குறிப்பிடுக?

.....

vi) இறந்த கால படர்க்கை வினைச்சொல் ஒன்றைத் தெரிவு செய்க.

.....

(6X1=6 புள்ளிகள்)

(02) பின்வரும் சொற்களில் உள்ள உயிர்க்குறிகளின் பெயர்களை எழுதுக.

1) நுட்பம் - ..... 2) சூழல் - .....

3) சுத்தம் - .....

(3X1=3 புள்ளிகள்)

பக். 7ஐப் பார்க்க.

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

(03) சரியான விடை எழுதுக.

1) இராமாயணத்தில் நன்றிமறவாது அண்ணனுக்காக போர்க்களம் சென்றவர் யார்?

.....

2) காந்தித் தாத்தா பாடலை இயற்றியவர் யார்? .....

3) "கண் திறத்தல்" என்னும் மரபுத்தொடரின் கருத்து. .....

4) "எதிர்த்துப் பேசுதல்" என்னும் கருத்தைக் குறிக்கும் மரபுத்தொடரை எழுதுக.

.....

5) உயிர் மெய் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது? .....

(5X1=5 புள்ளிகள்)

(04) பின்வரும் மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.

1) ஓட்டைவாயன் - .....

2) இலவு காத்த கிளி - .....

(2X1=2 புள்ளிகள்)

(05) கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

தொண்டுகளில் பெரிது எனக் கவிஞர் கருதுவது எதனை? .....

(2X1=2 புள்ளிகள்)

(06) பின்வரும் பாடலடியில் வரும் வெற்றிடத்தை நிரப்புக.

திறமை உள்ள மனிதரைச்

.....

சிறந்த நிலையை உற்றிடும்
சிறப்பும் புகழும் பெற்றிடும்

(2X1=2 புள்ளிகள்)

(07) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1) Is this yours? .....

2) Please go out .....

(2X1=2 புள்ளிகள்)

(08) பின்வரும் சுருக்கக் குறியீடுகளின் விரிவாக்கத்தை எழுதுக.

1) இ.ம.வ -.....

2) இ.ஒ.கூ -.....

(2X1=2 புள்ளிகள்)

www.ikedu.lk

(09) கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

இரு / அந்த / நிழல் / பக்கங்களிலும் / வீதியின் / மரங்கள் / நின்றன.

.....

(2X1=2 புள்ளிகள்)


(10) பின்வரும் வாக்கியத்தின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.


நான் ஒரு புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தேன்.

.....

(2X1=2 புள்ளிகள்)

(11) ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.

1. 

2. 

....

(2X1=2 புள்ளிகள்)

(12) சிங்களத்தில் எழுதுக.

1) உங்களுக்குப் பசிக்கிறதா? - .....

2) எனக்குப் பால் தாருங்கள் - .....

(13) தமிழ்க் கருத்து எழுதுக. (2X1=2 புள்ளிகள்)

1) லமயாய் செல்லம் கரனவா - .....

2) தாத்தா வடட்ட யனவா - .....

(2X1=2 புள்ளிகள்)

(14) பின்வரும் தமிழ் வாக்கியங்களை ஆங்கில வாக்கியங்களாக எழுதுக.

1) நாங்கள் பாடல் ஒன்றைப் பாடுவோம் - .....

2) நான் நீர் குடித்துக் கொண்டிருந்தேன் - .....

(2X1=2 புள்ளிகள்)

(15) "நுளம்புகள் பெருகாது தடுக்கும் வழிகள்" என்ற தலைப்பில் மூன்று கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக. (எழுவாய் பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டல்களும் சரியாக அமைதல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியத்திலும் ஆறு சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....


(3X2=6 புள்ளிகள்)

www.lkedu.lk

- **பின்வரும் வினாக்களுக்குரிய விடையினைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

(16) தரப்பட்டுள்ள எண்ணை எழுத்தில் எழுதுக.

25030 - .....


(17)  இத்திண்ம உருவின்

1) உச்சிகள் எத்தனை? .....

2) முகங்கள் எத்தனை? .....

(18) 4, 5, 7, 3 ஆகிய எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகச்சிறிய எண்ணை எழுதுக. .....

(19) உருவைக் கொண்டு அருகே தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.



1) நிழற்றிய பகுதியை ஒரு பின்னமாக எழுதுக?

.....

2) நிழற்றாத பகுதியை ஒரு தசம எண்ணாக எழுதுக?

.....

3) ஒவ்வொரு கட்டத்தினதும் நீளம் 1cm உம் அகலம் 1cm உம் ஆகும். நிழற்றிய பகுதியின் பரப்பளவு எத்தனை சதுரசென்றிமீற்றர்? .....

(20) கடையொன்றிலிருந்த தோடம்பழங்களின் $\frac{3}{4}$ ஐ விற்ற பின்னர் 5 தோடம்பழங்கள் எஞ்சியிருந்தன. ஆரம்பத்தில் கடையிலிருந்த தோடம்பழங்கள் எத்தனை?

.....

(21) ஒரு பிள்ளைக்கு 4 வீதம், பாடசாலை ஒன்றிலுள்ள 145 பிள்ளைகளுக்கு வழங்க 490 புத்தகங்கள் மாத்திரம் இருந்தன. இன்னும் எத்தனை புத்தகங்கள் எத்தனை தேவை?

.....

(22) பாடசாலை கலை நிகழ்ச்சிகள் 11.25 மணிக்கு ஆரம்பமாகி 14.15 மணிக்கு முடிவடைந்த கலை நிகழ்ச்சிகள் எவ்வளவு நேரம் நடைபெற்றன?

.....

(23) வெற்றிடங்களை நிரப்புக.


3kg 75g	4kg 25g
+ 2kg 80g	− 2kg 70g
_____	_____

(24) இம்முக்கோணி மூன்று பக்கமும் சமமானது எனின்,


1) இதில் எத்தனை சமச்சீர் அச்சுகள் வரையலாம்?

.....

2) அவற்றை உருவில் வரைந்து காட்டுக.




www.ikeou.lk

(25) 


இவ்வுருவின் சுற்றளவு யாது?

.....

(26) தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க.



கொழும்பில் இருந்து அநுராதபுரம் செல்வதற்கான தூரம் யாது? .....

(27) 

கேத்திர கணித பலகை ஒன்றில் அறையப்பட்டுள்ள ஆணிகள் சுற்றி இறப்பர்பட்டி ஒன்றினால் சுற்றப்பட்டுள்ள வடிவத்தை உரு காட்டுகிறது. ஆணிகளுக்கிடையே உள்ள தூரம் 1m எனின் இவ்வடிவத்தின் பரப்பளவு யாது?

.....

(28) 2 லீற்றர் 350 மில்லிலீற்றர் பால் உள்ள பாத்திரமொன்றினுள் இன்னும் 5 லீற்றர் 750 மில்லிலீற்றர் பால் ஊற்றப்பட்டது. இப்போது பாத்திரத்தில் உள்ள பாலின் கனவளவு யாது?

.....

(29) கமலாவின் வயது 8 வருடம் 11 மாதங்கள். ராணியின் வயது 7 வருடம் 9 மாதங்கள். இருவரது வயதுகளினதும் கூட்டுத்தொகை யாது? ..... வருடம் ..... மாதங்கள்.

(30) பின்வரும் பின்னங்களைக் கூட்டுக.

$\frac{3}{8} + \frac{1}{2} =$ .....

(15X2=30 புள்ளிகள்)

- **31 தொடக்கம் 60 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட விடைகளில் இருந்து சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(31) இலங்கைக்கே உரிய விலங்கினமாக அமையாதது?

1) மயில் 2) காட்டுச்செண்பகம் 3) நெருப்புக்கோழி 4) சருகுமான்

(32) நீரின் மூலம் பரம்பலடையும் வித்துக்கள் முறையே

1) தாமரை, அச்சி 2) வேங்கை, எருக்கலை

3) கமுகு, குன்றிமனி 4) தென்னை, தாமரை

(33) மரச்செதுக்கல் வேலைக்குப் பிரசித்தி பெற்ற இடம்

1) சிகிரியா 2) எம்பக்க 3) தலதாமாளிகை 4) யாப்பகூவ

(34) வேர்விடும் தாவர இலை




1) வற்றாளை 2) ஆல் 3) பருத்தி 4) சதைகரைச்சான்

(35) இரும்புச் சத்து குறைபாட்டால் ஏற்படும் நோய்

1) நீரழிவு 2) கண்டமாலை 3) மாலைக்கண் 4) குருதிச்சோகை

www.ikedu.lk

(36) முன்னால் பாதை வேலை என்பதைக் குறிக்கும் குறியீடு எது?


1)  2)  3)  4) 

(37) சிவப்பு நிறத்தையும், நீல நிறத்தையும் கலக்கும்போது உண்டாகும் நிறம் யாது?

1) ஊதா 2) செம்மஞ்சள் 3) கறுப்பு 4) பச்சை

(38) நீரில் அமிழ்ந்து வாழும் தாவரம்

1) ஆகாயத்தாமரை 2) சல்வீனியா 3) தாமரை 4) ஐதரில்லா

(39)  இவ் உடுக்கோலத்தின் பெயர்

1) சிறுகரடி
2) வேட்டைக்காரன்
3) விருட்சிகம்
4) பெருங்கரடி

(40) நாற்று மேடையில் இடப்படாது நேரடியாக பாத்தியில் நடப்படும் பயிர்வகை

1) தக்காளி 2) மிளகாய் 3) கத்தரி 4) வெண்டி





(41) தான் பயணம் செய்யும் இடங்களில் பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் என்பது

1) நாட்டுக்காக ஆற்ற வேண்டிய கடமை 2) பாடசாலைக்காக ஆற்ற வேண்டிய கடமை
3) வகுப்பிற்காக ஆற்ற வேண்டிய கடமை 4) வீட்டுக்காக ஆற்ற வேண்டிய கடமை

(42) தியானச் செயற்பாட்டில் மனவுறுதிக்கு அடுத்த செயற்பாடு எது?

1) மனதைத் தளர்த்தல் 2) உடலைத் தளர்த்தல்
3) பிரார்த்தனை 4) மலர்வு

(43) எதிரிகளிடமிருந்து தப்புவதற்கு தனது உடலின் நிறத்தை சூழலின் நிறத்திற்கேற்றவாறு மாற்றக் கூடிய இயல்பைக் கொண்டுள்ள பிராணி எது?

1)  2)  3)  4) 

(44) கடலாமை முட்டை இடுவது?

1) கடலுக்கடியில் 2) கடல் மேற்பரப்பில்
3) கடற்கரையை அண்டிய தரையில் 4) கடலிலுள்ள பாறைகளுக்கு இடையில்

(45) நெற்பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் எலிகளை உண்டு விவசாயிகளுக்கு நன்மை செய்பவை?

1) செண்பகம், ஆந்தை 2) பன்றி, பாம்பு
3) பூனை, ஆந்தை 4) பாம்பு, ஆந்தை

(46) தனது வாலை சிலிர்த்து எதிரிகளை விரட்டுவது எது?

1) முள்ளம்பன்றி 2) பூனை 3) அணில் 4) மரநாய்

www.ikeau.lk


(47) அனைத்துமுண்ணிப் பிராணிகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதி

1) காகம், பூனை, பன்றி, மீன், மனிதன்

2) நாய், கோழி, முதலை, பல்லி, மரநாய்

3) கொக்கு, ஒணான், நுளம்பு, தும்பி,கறையான்

4) ஓணான், நாய், பூனை, புலி, நரி

(48) 

இதனைப் பிடித்துத் தூக்குவது

1) காதுகளில் 2) கழுத்துப் பகுதியில்

3) உடலில் 4) காலில்

(49) தேசியக் கொடியில் வாளேந்திய சிங்கம் உணர்த்தி நிற்பது

1) வீரம் 2) தர்மம் 3) தூய்மை 4) தன்னிறைவு

(50) பண்ணையுடன் கூடிய பால்மாத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்

1) பொலனறுவை 2) அம்பலாங்கொட 3) அம்பாந்தோட்ட 4) அம்பேவெல

(51) இலங்கைக்கே உரித்தான தாவரங்களின் எண்ணிக்கை யாது?

1) 803 2) 830 3) 833 4) 8030

(52) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது

1) தீக்கோழி 2) சின்னக்கிளி 3) காட்டுக்கோழி 4) நாகணவாய்

(53) ஒருவர் நாட்டிற்காக ஆற்ற வேண்டிய கடமையாக அமைவது

1) வகுப்பு மாணவருடன் நட்புடன் பழகுதல்

2) பாடசாலை வளங்களைப் பாதுகாத்தல்

3) தாயினதும் தந்தையினதும் வேலையில் உதவுதல்

4) தேசியக் கொடிக்கும் தேசிய கீதத்திற்கும் கௌரவமளித்து நடந்து கொள்ளல்

(54) இலஞ்ச ஊழல் தொடர்பாக முறைப்பாடுகளை அறிவிப்பதற்குப் பொருத்தமான தொலைபேசி இலக்கம்

1) 1955 2) 1956 3) 1954 4) 1948

(55) நான் ஒளி விளக்காவேன்! எதிர்காலத்தில் எனது நாட்டுக்கும் ஒளி விளக்காவேன்! இக் கூற்றுக்களுடன் தொடர்புடைய தியானத்தின் படிநிலை

1) மலர்வு 2) மனதைத் தளர்த்தல் 3) பிரார்த்தனை 4) மனவுறுதி

(56) 

அருகே உள்ள தாவரம்

1) தாழை 2) நாகதாளி

3) கற்றாளை 4) எருக்கலை

(57) ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் பிராணி அல்லாதது

1) ஆமை 2) கடற்குதிரை 3) நத்தை 4) கடலாமை

(58) குந்துக்காலி என அழைக்கப்படும் பறவை

1) மைனா 2) காட்டுச்சேவல் 3) மலைக்காகம் 4) புழுணி

(59) இலங்கைக்கே சொந்தமான தீவாக அமையாதது

1) கச்சதீவு 2) மாலைதீவு 3) புங்குடுதீவு 4) நெடுந்தீவு

(60) சர்வதேச குடிநீர் தினம் கொண்டாடப்படுவது

1) மார்ச் - 22 2) மார்ச் - 08 3) மே - 01 4) ஏப்ரல் - 23

(1X30=30 புள்ளிகள்)

www.ikedu.lk